# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## O.S. NO.131/2021

**15.02.2023 - வா.சா. 1, மாதவன் சத்திய பிரமாணத்தின் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

சொத்தை வாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான் தாவா கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்தினேன். தாவா சொத்தை நான் நேரடியாக பார்வையிட்டேன். சதுரடி கணக்கில் விலை பேசவில்லை, மொத்தமாக பேசப்பட்டது. பிரதிவாதி விலையை நிர்ணயம் செய்தார் அதை நான் அப்படியே ஒப்புக் கொண்டேன். 2015 ல் ஒரு கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது தேதி, மாதம் நினைவில்லை அந்த ஆண்டே ரத்து செய்யப்பட்டது. அதற்காக முன்பணமாக ரூ.5 லட்சம் கொடுத்திருந்தேன். அசல் தொகையையும், வட்டியையும் சேர்த்து பைசல் செய்தார். எவ்வளவு தொகை கொடுத்து பைசல் செய்தார் என்று நினைவில்லை. 2016ல் மற்றொரு கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது. 2வது கிரைய ஒப்பந்தத்திற்கு முன்பணம் ரூ.12 லட்சம் கொடுக்கப்பட்டது. அதற்கு எவ்வளவு வட்டி கொடுத்து பைசல் செய்தார் என்று தற்போது நியாபகம் இல்லை. 2வது கிரைய ஒப்பந்தம் 2017ல் ரத்து செய்யப்பட்டது. 2017ல் 3வது ஒரு கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது. அந்த கிரைய பத்திரம் 2019ல் ரத்து செய்யப்பட்டது. 3வது கிரைய ஒப்பந்தத்திற்கு எவ்வளவு முன் பணம் கொடுத்தேன் என்று நியாபகம் இல்லை. 3வது கிரைய ஒப்பந்தத்தை பைசல் செய்து விட்டதால் அதை ரத்து செய்து விட்டேன். தாவா கிரைய ஒப்பந்தத்திற்கு நான் பணம் கொடுத்து போடப்பட்டது. மேற்சொன்ன 3 கிரைய ஒப்பந்தத்தில் கண்ட தொகையை சேர்த்து தாவா கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு வில்லங்கம் பார்த்தேன். தாவா சொத்திற்கு அரசாங்க மதிப்பீடு பார்க்கவில்லை. எனக்கு 3 ஏக்கர் நிலம் உள்ளது. விவசாயத்தில் வந்த பணத்தைக் கொண்டு தான் பிரதிவாதிக்கு பணம் கொடுத்தேன். நான் வா.சா.ஆ.2 முன்னிலைக்கு ரூ.25,75,000/- கொடுக்கவில்லை என்றும் ரூ.9 லட்சம் மட்டும் தான் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அந்த தொகையை நான் கிரையம் வாங்குவதற்காக கொடுக்கவில்லை என்றும், வட்டிக்காக கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் வட்டிக்காக பணம் கொடுத்து விட்டு தற்போது சொத்தை கிரையம் பெறுவதற்காக கொடுத்தேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/- மாதவன்

| |
|---|
| Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct<br><br>Sd/- Irusan Poonguzhali,<br>Additional District Judge,<br>Tiruvannamalai. |